Food and Agriculture Organization of the United Nations

# இந்தியப் பெருங்கடல் மீன்பிடி நடவடிக்கைகளுக்கான சிடேசன் (Cetacean) அடையாள அட்டைகள்



iotc ctoi

The designations employed and the presentation of material in this information product do not imply the expression of any opinion whatsoever on the part of the Food and Agriculture Organization of the United Nations (FAO) concerning the legal or development status of any country, territory, city or area or of its authorities, or concerning the delimitation of its frontiers or boundaries. The mention of specific companies or products of manufacturers, whether or not these have been patented, does not imply that these have been endorsed or recommended by FAO in preference to others of a similar nature that are not mentioned.

The views expressed in this information product are those of the author(s) and do not necessarily reflect the views or policies of FAO.

© **FAO,** 2018 (English version)
© **FAO,** 2021

Some rights reserved. This work is made available under the Creative Commons Attribution-NonCommercial-ShareAlike 3.0 IGO licence (CC BY-NC-SA 3.0 IGO; https://creativecommons.org/licenses/by-nc-sa/3.0/igo/legalcode).

Under the terms of this licence, this work may be copied, redistributed and adapted for non-commercial purposes, provided that the work is appropriately cited. In any use of this work, there should be no suggestion that FAO endorses any specific organization, products or services. The use of the FAO logo is not permitted. If the work is adapted, then it must be licensed under the same or equivalent Creative Commons licence. If a translation of this work is created, it must include the following disclaimer along with the required citation: "This translation was not created by the Food and Agriculture Organization of the United Nations (FAO). FAO is not responsible for the content or accuracy of this translation. The original [Language] edition shall be the authoritative edition."

Disputes arising under the licence that cannot be settled amicably will be resolved by mediation and arbitration as described in Article 8 of the licence except as otherwise provided herein. The applicable mediation rules will be the mediation rules of the World Intellectual Property Organization http://www.wipo.int/amc/en/mediation/rules and any arbitration will be conducted in accordance with the Arbitration Rules of the United Nations Commission on International Trade Law (UNCITRAL).

**Third-party materials.** Users wishing to reuse material from this work that is attributed to a third party, such as tables, figures or images, are responsible for determining whether permission is needed for that reuse and for obtaining permission from the copyright holder. The risk of claims resulting from infringement of any third-party-owned component in the work rests solely with the user.

**Sales, rights and licensing**. FAO information products are available on the FAO website (www.fao.org/publications) and can be purchased through publications-sales@fao.org. Requests for commercial use should be submitted via: www.fao.org/contact-us/licence-request. Queries regarding rights and licensing should be submitted to: copyright@fao.org.

# பொருளடக்கம்


சிடேசன்கள் (Cetaceans) தொடர்பான IOTC தேவைகள்........................ 4
இந்த வழிகாட்டியைப் பயன்படுத்துவது எப்படி...................................5
தொடர்களின் சொற்களஞ்சியம்..................................................6
சிடேசன் (Cetacean) புறத்தோற்றவியல்.......................................7
விலங்கினங்களின் விபரங்கள்...................................................8
ஓங்கில்கள்/டோல்பின்கள் (Dolphins)........................................8
போர்பொய்ஸ்கள் (Porpoises)................................................21
லார்ஜ் டோல்பின்கள் (Large dolphins)/
பிளாக்பிஷ் (blackfish)...........................................................22
பீக்ட் திமிங்கிலங்கள் (Beaked whales).......................................28
ஸ்பெர்ம் திமிங்கிலங்கள் (Sperm whales).....................................33
பலீன் திமிங்கிலங்கள் (Baleen whales)........................................36
காணக்கூடிய பிற இனங்கள்......................................................46

# சிடேசன்கள் (Cetaceans) தொடர்பான IOTC தேவைகள்

IOTC பாதுகாப்பு மற்றும் மேலாண்மை அளவீடுகளுக்கு (CMMs)* ஏற்ப சிடேசன்கள் தொடர்பாக மீனவர்கள்/ கண்காணிப்பாளர்கள் மேற்கொள்ள வேண்டிய மிக முக்கிய நடவடிக்கைகள் பின்வருமாறு:

1. வலைகளில் சிக்குப்படும் சந்தர்ப்பங்களை குறைக்குமாறு வடிவமைக்கப்பட்ட, மீன்களை திரளச்செய்யும் மீன்பிடி கருவிகளைப் பயன்படுத்த வேண்டும்.
2. IOTCக்கு உட்பட்ட பகுதிகளில், சுருக்கு வலையை அமைக்கும் முன் சிடேசன்கள் கண்ணில் பட்டால், மீன்பிடி படகுகள், அவ்விலங்குகளைச் சுற்றி மீன்பிடி வலையை வேண்டுமென்றே அமைக்கக்கூடாது.
3. சுருக்கு வலையொன்றினால் சிடேசன் ஒன்று தெரியாமல் சூழப்பட்டுவிட்டால், படகின் தலைவர், பயனிக்கும் குழுவின் பாதுகாப்பினைக் கருத்தில் கொள்கிற அதே வேளையில், சிடேசன்களை பாதுகாப்பாக வெளியேற்றப்படுவதற்கான தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.
4. சுருக்கு வலையினால் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் சுற்று வளைப்பு நிகழ்வுகளை, அல்லது மீன்பிடி கருவிகளினால் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் இடைத்தொடர்புகள் என்பன மீனவரினால், பதிவேடுகள் அல்லது கண்காணிப்பாளர்கள் மூலம் தெரியப்படுத்தல் அவசியம். பின்வரும் தகவல்கள் பதிவுசெய்யப்பட வேண்டும்:
   i. விலங்கினம் (தெரிந்தால்);
   ii. தனியன்களின் எண்ணிக்கைகள்;
   iii. இடைத்தொடர்பின் சுருக்கமான விபரம், அத்துடன் அத்தொடர்பு ஏன் மற்றும் எப்படி நிகழ்ந்தது என்ற விபரங்கள்;
   iv. இடைத்தொடர்பு நேர்ந்த இடம்;
   v. பாதுகாப்பாக வெளியேற்ற மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்; மற்றும்
   vi. வெளியேற்றலின் போதான விலங்கு பற்றிய மதிப்பீடு, சிடேசன் உயிருடன் இருக்கும் போது வெளியேற்றப்படினும் பின்னர் இறந்து விட்டதா என்பது உட்பட.

* IOTC னால் செய்யப்படும் மாறுதல்களை ஆண்டுதோறும் சரிபார்க்குமாறு உங்களுக்கு பரிந்துரைக்கப்படுகின்றது)

# இந்த வழிகாட்டியைப் பயன்படுத்துவது எப்படி

## விலங்கினங்களின் விபரங்கள்

**FAO குறியீடு: ஒவ்வொரு விலங்கினத்திற்குரிய பக்கத்தின் வலது மேல் ஓரத்தில் வழங்கப்பட்டுள்ளது**:

**WoRMS Life Science Identifier அடையாள ID**:

DBO

123456

விலங்கினத்திற்குரிய ஆங்கில பொதுப் பெயர் (ஒலியாக்கம்); தமிழ் பொதுப் பெயர் (காணப்படின்)

**பரம்பல் வரைபடங்கள்**: IOTC பகுதியில் ஒவ்வொரு இனத்தின் அறியப்பட்ட, சந்தேகிக்கப்படும் மற்றும் உய்த்துணரப்பட்ட பரவல்கள் வரைபடத்தில் நீலநிறத்தில் காட்டப்பட்டுள்ளன.

**நீளம்:** எல்லா இனங்களின் நீள அளவீடுகளும் முகவெளித்தாடையிலிருந்து வாலின் இரு மடல்களுக்கிடைப்பட்ட பள்ளம் வரை உள்ள நேர்கோட்டு நீளத்தைக் குறிப்பிடுகின்றன மற்றும் அவை அந்த இனத்திற்கான அதிகபட்ச பதிவு செய்யப்பட்ட அளவு ஆகும்.

## அடையாளம் காண உதவுவதற்கான குறிப்புகள்

**வழிகாட்டியின் ஒழுங்கமைப்பு: இனங்கள் புறத்தோற்றம் மற்றும்/அல்லது வகைப்பாட்டின் படி குழுக்களாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன (உ.ம். பீக்ட் (beaked) திமிங்கிலங்கள், டோல்பின்கள் (dolphins), போர்பொய்ஸ்கள் (porpoises), பலீன் (baleen) திமிங்கிலங்கள், பிளாக்பிஷ் (blackfish) போன்றவை). இக்குழுக்களை குறித்திடும்**

பக்கத்தின் முனையிலுள்ள நிறம் இவற்றை விரைவாக தேடுவதற்காக உதவுகின்றன.

**நிறம்**: களத்தில் சிடேசன்கள் அடையாளம் காண நிறங்கள் மிகவும் உதவியாக இருக்கும், இருப்பினும், பல நிறங்கள் இறந்த பிறகு விரைவாக மறைந்து விடுகின்றன மற்றும் விலங்குகள் தூரத்தில் இருந்தால் அல்லது குறைந்த வெளிச்சத்தில் இருந்தால் தொளிவற்று இருக்கும். எனவே, சிடேசன்களை அடையாளம் காணும்போது நிறத்தைக் கவனமாகப் பயன்படுத்த வேண்டும்.

**இறந்த விலங்குகள்**: நேரடியாக ஆராயக் கூடிய இறந்த விலங்குகளை அடையாளம் காண, பற்களின் எண்ணிக்கை, தொண்டை மடிப்புகளின் எண்ணிக்கை மற்றும் பலீன் (baleen) இன் பண்புகள் போன்றவை பட்டியலைச் சுருக்கவும் இனங்களை அடையாளம் காணவும் உதவியாக இருக்கும்.

**புகைப்படங்கள்**: முக்கியமாக இறந்த விலங்குகளை புகைப்படம் எடுங்கள். தலை, ஏதேனும் ஆய்ந்தறிதற்குரிய அம்சங்கள், காயங்கள் மற்றும் வெவ்வேறு கோணங்களில் முழு உடல் ஆகியவற்றை படம் எடுங்கள்.

# தொடர்களின் சொற்களஞ்சியம்

| தொடர் | பொருள் | தொடர் | பொருள் |
|---|---|---|---|
| பலீன் (Baleen) | பலீன் திமிங்கிலங்களின் மேல் அன்னத்திலிருந்து வரிசையாக பக்கம் பக்கமாக தொங்கும் முடிபோன்ற (கெராட்டின்), அடர்த்தியான தட்டுகள். உணவை வடிக்கட்ட உதவுகின்றன | தாடை (ஜாவ்/Jaw) | பற்கள் அமைந்துள்ள வாயின் மேல் மற்றும் கீழ் பகுதிகள். டூத்ட் (toothed) திமிங்கிலங்களின் மேல் மற்றும் கீழ்தாடைகளில் வழமையாக தால இரு வரிசைகளில் பற்கள் காணப்படும் (வலது மற்றும் இடது) |
| அலகு/ சொண்டு (பீக்/ Beak) | வெளித்தாடை (ரோஸ்ட்ரம் /Rostrum) | மெலன் (Melon) | டூத்ட் (Toothed) திமிங்கிலங்களின் நெற்றிப்பகுதியை உருவாக்கும் கெழுப்பு இழையங்களின் கூட்டம், மற்றும் இது எதிரொலி இடமறியலுக்கான ஒலியை குவிக்க பயன்படுகிறது என நம்பப்படுகிறது |
| கரடான தோல் (Callosities) | ரைட் திமிங்கிலத்தின் (Right whale) தலையில் அமைந்துள்ள கடினமான, கெராட்டினாலக்கப்பட்ட இழையத் தொகுதி, இதில் ஏராளமான திமிங்கிலப் பேன்கள் வசிக்கின்றன. | வெளித்தாடை (ரோஸ்ட்ரம்/ Rostrum) | மண்டையோட்டின் முன்பகுதியில் அல்லது cetaceanனின் தலையில் காணப்படும் அலகு போன்ற நீட்சி |
| கேப் (Cape) | விலங்கின் இளம் நிறமான பகுதியிலிருந்து தெளிவான கோட்டினால் வேறுபடுத்தப்படும் பின்பக்கம் | வால் ஸ்டாக் (Tail stock) | முதுகு துடுப்பு மற்றும் வால் ஃபுளுக்குகளுக்கு இடையேயான உடல் பகுதி |
| முதுகு துடுப்பு (Dorsal fin) | உடலின் பின்பகுதியின் மேற்புறமாகவுள்ள துடுப்பு | தொண்டைப் பள்ளங்கள் (grooves)/ மடிப்புகள் (pleats) | பலீன்(Baleen) அல்லது பீக்ட் (beaked) திமிங்கிலங்களின் தொண்டையில் வாயிலிருந்து வயிற்றுக்கிடைப்பட்ட பகுதியை அணியிடும் நீளவாக்கிலான மடிப்புகள் |
| பெல்கேட் (Falcate) | அரிவாள் வடிவிலானது, வளைந்தது, வழக்கமாக நுனிப்பகுதியில் கூர்மையானது | பல் வரிசை | டூத்ட் (toothed) திமிங்கிலங்களின் கீழ் இடது, கீழ் வலது, மேல் இடது, மேல் வலது தாடைகளில் பற்கள் உள்ளன |
| ஃபிளிப்பர்கள் (Flippers) | கடல் பாலூட்டியின் தட்டையான முன் அவயம் | டிரைபார்டைட் (Tripartite) | தெளிவாக வேறுபடுத்தப்பட்ட மூன்று பகுதியான நிற வடிவம் (pattern), பொதுவாக மேலே அடர், கீழே வெளிர் மற்றும் பக்கங்களிலும் இடைப்பட்ட நிறம் |
| வாலின் மடல்கள் (ஃபுளுக்குகள்/ Flukes) | திமிங்கிலம் அல்லது டோல்பினின் கிடைமட்டமான வால் | டர்பெர்சில்கள் (Turbercles) | ஒரு வட்டவடிவ உருண்டை நீட்சி அல்லது புடைப்பு |

# சிடேசன் (Cetacean) புறத்தோவியல்

## டோல்பின்கள் (Dolphins)



**டோல்பினின் பொதுவான பண்புகள் (பக்கங்கள் 8-20)**

- சிறியதிலிருந்து நடுத்த அளவு (1-10 m)
- பல கூம்பிய பற்கள்
- பெரும்பாலும் தனித்துவமான அலகு (beak)
- பெரும்பாலும், அளவான முதுகுத் துடுப்பு
- சிறியதிலிருந்து மிகவும் பெரிய குழுக்கள்
- ஒற்றை மூச்சுத் துவாரம் (பிலெளஹோல்/ blowhole)

## பிளாக்பிஷ் (Blackfish)



**பிளாக்பிஷ்ஷின் ொதுவான பண்புகள் (பக்கங்கள் 22-27)**

- நடுத்தர அளவு (3-7 m)
- அலகு இல்லை
- பல பெரிய கூம்பிய பற்கள்
- அடர் நிறம்
- பெரிய முதுகுத் துடுப்பு
- பெரும்பாலும் மார்பில் வெள்ளை நிற V-வடிவிலான பட்டி (செவ்ரன் /chevron)

## பீக்ட் (Beaked) திமிங்கிலங்கள்



**பீக்ட் திமிங்கிலங்களின் பொதுவான பண்புகள் (பக்கங்கள் 28-32)**

- நடுத்தர அளவு (4-13 m)
- தனித்துவமான அலகு
- சிறிய முதுகுத் துடுப்பு தலையிலிருந்து 2/3 தூரத்தில்
- உடலின் பக்கப்பகுதியின் பைகளில் பொருந்தும் சிறிய ஃபிளிப்பர்கள்
- இரண்டு குறுகிய தொண்டைப் பள்ளங்கள்
- சிறு குழுக்களாக பயணிக்கிறது
- வால் மடல்களுக்கிடையில் (tail flukes) மத்தியுள்ள பள்ளம் (central notch) இல்லை
- கீழ் தாடையில் 1-2 சோடிகளுக்கு மேற்பட பற்கள் இல்லை

## பலீன் (Baleen) திமிங்கிலங்கள்



**பலீன் திமிங்கிலங்களின் பொதுவான பண்புகள் (பக்கங்கள் 36-45)**

- அளவில் மிகப் பெரியது (4-33 m)
- இரட்டை மூச்சுத்துவாரம்
- பற்கள் இல்லை
- மேல்தாடையில் baleen தட்டுகள்
- முதுகுத்துடுப்பு சிறியது, அல்லது இல்லை

பெரும்பாலும், இடம்பெயர்பவை, அனைத்தும் அல்ல பொதுவாக சிறிய குழுக்கள்

டோல்பின்கள் (Dolphins)

# Common Bottlenose Dolphin
## (கொமன் பாட்டில்நோஸ் டோல்பின்)
*Tursiops truncatus*

SP: Tursión
FR: Grand dauphin
JA: ハンドウイルカ
CH: 普通宽吻海豚

DBO
137111

அதிகபட்ச நீளம்: 3.8 m




**முதன்மையான கண்டறிதலுக்குரிய அம்சங்கள்**

1. பெரிய உறுதியான சாம்பல் நிற டோல்பின்
2. மெலனிலிருந்து ஒரு மடிப்பின் (கிரீஸ்/crease) மூலம் பிரிக்கப்பட்ட குட்டையான பருத்த குட்டையான அலகு
3. முதுகின் நடுப்பகுதியின் அருகில் உயரமான பெல்கேட் (falcate) வடிவிலான முதுகுத் துடுப்பு
4. நிறம்: அடர் ஸ்லேட் சாம்பல் கீழ்பகுதியல் இலேசாக மங்கலடைகிறது
5. பற்கள்: ஒவ்வொரு பல்வரிசையிலும் 18-27 பற்கள்



# Indo-Pacific Bottlenose Dolphin
## (இந்து-பசுபிக் பாட்டில்நோஸ் டோல்பின்)
*Tursiops aduncus*

SP: Delfín mular del Indo-Pacífico
FR: Grand dauphin de l'indo-pacifique
JA: ミナミハンドウイルカ
CH: 印度 - 太平洋瓶鼻海豚

DBZ
254983



அதிகபட்ச நீளம்: 2.7 m




**முதன்மையான கண்டறிதலுக்குரிய அம்சங்கள்**

1. நடுத்தர அளவான சாம்பல் நிற டோல்பின்
2. மெலனிலிருந்து ஒரு மடிப்பின் மூலம் பிரிக்கப்பட்ட நடுத்தர பருத்த அகலமான அலகு
3. அடிப்பகுதி அகன்ற முதுகுத் துடுப்பு, T. truncatus இனத்தைவிட வளைவில் குறைந்தது (less falcate).
4. நிறம்: நடுத்தர சாம்பல் நிறம், கீழ் பகுதியில் புள்ளிகளுடன் வெளிர் நிறத்திற்கு மங்கலடைகிறது.
5. பற்கள்: ஒவ்வொரு பல்வரிசையிலும் 21-29



டோல்பின்கள் (Dolphins)

# Pantropical Spotted Dolphin
## (பேன்ட்ரோபிகல் ஸ்பாட்டட் டோல்பின்)
*Stenella attenuata*

SP: estenela moteada, delfin manchado pantropical
FR: dauphin tacheté pantropical
JA: マダライルカ
CH: 泛热带斑海豚

**DPN**
137105

அதிகபட்ச நீளம்: 2.6 m




**முதன்மையான கண்டறிதலுக்குரிய அம்சங்கள்**

1. ஒல்லியான (slender) டோல்பின்
2. வெள்ளை உதடுகளுடன் நீண்ட வெளித்தாடை (rostrum)
3. மிகவும் குறுகிய பெல்கேட் (falcate) வடிவிலான முதுகுத் துடுப்பு
4. கண்களுக்கு மேல் தோன்றி, முதுகுத் துடுப்புக்குக் கீழ் சரியும் தனித்துவமான முதுகு கேப்
5. வெவ்வேறுபடும் வெள்ளை புள்ளிகள் மற்றும் சில நேரங்களில் இருக்காது
6. பற்கள்: ஒவ்வொரு பல்வரிசையிலும் 34-48 பற்கள்



# Spinner Dolphin
## (ஸ்பின்னர் டோல்பின்)
## *Stenella longirostris*

**SP: estenela giradora, delfin giradora**
**FR: dauphin à long bec**
**JA: ハシナガイルカ**
**CH: 飞旋海豚**

**DSI**
**137109**

டொல்பின்கள் (Dolphins)

அதிகபட்ச நீளம்: 2.3 m




**முதன்மையான கண்டறிதலுக்குரிய அம்சங்கள்**

1. மிகச்சிறிய ஒல்லியான (petite slender) டோல்பின்
2. மிகவும் நீண்ட மெலிந்த வெளித்தாடை (rostrum)
3. சிறு முக்கோண முதுகுத் துடுப்பு
4. நிறம்: டிரைபார்டைட் வடிவம், மேலே அடராகவும் கீழே வெளிர் நிறத்திலும்
5. அடர் நிற கண்களிலிருந்து ஃபிளிப்பர் வரை கோடு மற்றும் அடர் நிற உதடுகள்
6. பற்கள்: ஒவ்வொரு பல்வரிசையிலும் 40-62 சிறு பற்கள்



# Striped Dolphin
## (ஸ்ட்ரிப்ட் டோல்பின்)
*Stenella coeruleoalba*

SP: estenela listada, delfin listado
FR: dauphin bleu et blanc
JA: スジイルカ
CH: 条纹的海豚

**DST**
137107

அதிகபட்ச நீளம்: 2.6 m




**முதன்மையான கண்டறிதலுக்குரிய அம்சங்கள்**

1. மெலனிலிருந்து மடிப்பினால் பிரிக்கப்பட்ட நடுத்தர நீளமான அலகு
2. கண்டறிதலுக்கான நிற அமைப்பு:
   i) சாம்பல் நிற முதுகென்பு பிரகாசம் (spinal blaze),
   ii) அடர் கண்ணிலிருந்து ஃபிளிப்பர் வரை கோடு மற்றும்
   iii) கண்ணிலிருந்து பக்கங்களை நோக்கி அடர் கோடு
3. பற்கள்: ஒவ்வொரு பல்வரிசையிலும் 40-55 பற்கள்



# Common Dolphin
## (கொமன் டோல்பின்)
*Delphinus delphis**

SP: Delfin común de rostro largo
FR: Dauphin commun
JA: マイルカ
CH: 普通海豚

**DCO**
137094

டொல்பின்கள் (Dolphins)

அதிகபட்ச நீளம்: 2.6 m




**முதன்மையான கண்டறிதலுக்குரிய அம்சங்கள்**

1. மிகவும் நீண்ட மூக்கு
2. தட்டையான சரிவான மெலன்
3. முதுகுத் துடுப்பிற்கு கீழ் தெளிவான அடர் சாம்பல் நிற V வடிவம்
4. முதுகுத் துடுப்பு மற்றும் கண்ணிற்கு இடையே பக்கபுறத்தில் பெரிய கிரீம்/தங்கநிற படை (patch)
5. பற்கள்: ஒவ்வொரு பல்வரிசையிலும் 54-67 பற்கள்



* D. d. tropicalis மற்றும் D. d. delphis இந்தியப் பெருங்கடலில் தென்படுகின்றன

# Fraser's Dolphin
## (பிரசர்ஸ் டோல்பின்)
## *Lagenodelphis hosei*

SP: delfin de Fraser
FR: dauphin de Fraser
JA: サラワクイルカ
CH: 弗雷泽的海豚

**FRD**
137099




அதிகபட்ச நீளம்: 2.7 m

**முதன்மையான கண்டறிதலுக்குரிய அம்சங்கள்**

1. பருமனான (stocky) டோல்பின்
2. சிறிய நிமிர்ந்த முக்கோண முதுகுத் துடுப்பு
3. மிகச் சிறிய ஆனால் தனித்துவமான அலகு
4. முகத்திலிருந்து மலத்துவாரம் வரை கோடு, சிலசமயம் வேறுபடுத்த இயலாது
5. வாயிலிருந்து பிளிப்பர் வரை அடர் நிற கோடு
6. பற்கள்: ஒவ்வொரு பல்வரிசையிலும் 38-44 பற்கள்



# Rough-toothed Dolphin
## (ரௌஹ்ப்-டூத்ட் டோல்பின்)
*Steno bredanensis*

SP: esteno, delfín de dientes rugosos
FR: sténo
JA: シワハイルカ
CH: 粗齿海豚

**RTD**
137110

டொல்பின்கள் (Dolphins)

அதிகபட்ச நீளம்: 2.8 m




**முதன்மையான கண்டறிதலுக்குரிய அம்சங்கள்**

1. நீண்ட கூம்புத் தலை, சரிவான மெலனுடையது
2. பெரிய மிகத்தெளிவான பெல்கேட் (falcate) வடிவிலான முதுகுத் துடுப்பு
3. அடர் சாம்பல் நிற முதுகு கேப், முதுகுத் துடுப்பிற்கு முன்புறத்தில் குறுகுகிறது
4. வயிறு, உதடுகள் மற்றும் கீழ்தாடை வெள்ளை/இளஞ் சிவப்பு
5. பற்கள்: ஒவ்வொரு பல்வரிசையிலும் 19-28
6. பற்கள் சுருங்கியும் மேடுபள்ளமாகவும் இருக்கும்



# Indo-Pacific Humpback Dolphin
## (இந்து-பசுபிக் ஹம்பெக் டோல்பின்)
*Sousa chinensis*

SP: delpfin jorobado del Indo-pacifico
FR: dauphin à bosse de l'Indo-Pacifique
JA: シナウスイロイルカ
CH: 印度太平洋驼背海豚

**DHI**
220226




அதிகபட்ச நீளம்: 2.7 m

**முதன்மையான கண்டறிதலுக்குரிய அம்சங்கள்**

1. உறுதியான உடல்
2. நீண்ட நன்கு வரையறுக்கப்பட்ட அலகு
3. குறுகிய மற்றும் அகன்ற-அடியையுடைய முதுகுத் துடுப்பு
4. நிறம்: இளமையில் சாம்பல் நிறமாகவும் வளர்ந்ததில் பலவண்ண புள்ளிகளுடன் வெளிர் சிவப்பு என வேறுபடுகிறது
5. பற்கள்: ஒவ்வொரு பல்வரிசையிலும் - மேல் தாடை 32-38, கீழ்த்தாடை 29-38



# Indian Ocean Humpback Dolphin
## (இந்து சமுத்திர ஹம்பெக் டோல்பின்)
*Sousa plumbea*

SP: delfin jorobado del Océano Indico
FR: dauphin à bosse de l’océan Indien
JA: ザトウクジラ イルカ
CH: 印度洋驼背海豚

-

383586



அதிகபட்ச நீளம்: 2.8 m




**முதன்மையான கண்டறிதலுக்குரிய அம்சங்கள்**

1. உறுதியான உடல்
2. நீண்ட நன்கு வரையறுக்கப்பட்ட அலகு
3. முதுகுத் திமிலில் சிறிய முதுகுத் துடுப்பு
4. நிறம்: பழுப்பு/சாம்பல், சில நேரங்களில் முதுகுத் துடுப்பில் வெள்ளை/இளஞ்சிவப்பு
5. பற்கள்: ஒவ்வொரு பல்வரிசையிலும் - மேல் தாடை 33-39, கீழ்தாடை 31-37



டொல்பின்கள் (Dolphins)

# Australian Humpback Dolphin
## (ஆஸ்திரேலிய ஹம்பெக் டோல்பின்)
## *Sousa sahulensis*

SP: delfin jorobado Australiano
FR: dauphin à bosse d'Australie
JA: -
CH: 澳大利亚驼背海豚

-

816452




அதிகபட்ச நீளம்: 2.7 m

**முதன்மையான கண்டறிதலுக்குரிய அம்சங்கள்**

1. உறுதியான உடல்
2. நீண்ட நன்கு வரையறுக்கப்பட்ட அலகு
3. சிறிய மற்றும் அகன்ற- அடியையயுடைய முதுகுத் துடுப்பு
4. நிறம்: இளம் சாம்பல் நிற, முதுகுத் துடுப்பில் சிறிதளவு வெள்ளை நிறம்
5. பற்கள்: ஒவ்வொரு பல்வரிசையிலும் மேல் தாடை 31-35 பற்கள் கீழ்தாடை 31-34



# Irrawaddy Dolphin
## (இறவாட்டி டோல்பின்)
*Orcaella brevirostris*

SP: delfin de Irawaddy
FR: orcelle, dauphin de l'Irrawaddy
JA: カワゴンドウ
CH: 伊洛瓦底江海豚

**IRD**

148732

டோல்பின்கள் (Dolphins)

அதிகபட்ச நீளம்: 2.75 m




**முதன்மையான கண்டறிதலுக்குரிய அம்சங்கள்**

1. வெளித்தாடை இல்லை, மழுங்கிய உருண்டை தலை
2. சிறு உருண்டை முதுகுத் துடுப்பு
3. கழுத்திலிருந்து முதுகுத் துடுப்பு வரை முதுகுப் பள்ளம்
4. நிறம்: இளம் சாம்பல் நிறம், கீழ் பகுதியை விட மேல்பகுதியில் அடர்நிறம்
5. பற்கள்: ஒவ்வொரு பல்வரிசையிலும் 8-19 பற்கள் மேல்தாடை, 11-18 பற்கள் கீழ்தாடை



# Australian Snub-fin Dolphin
## (ஆஸ்திரேலிய ஸ்னுப்-பின் டோல்பின்)
*Orcaella heinsohni*

SP: delfin del Heinsohn
FR: orcelle d'Australie
JA: オーストラリアカワゴンドウ
CH: 澳大利亚鶺鰭海豚

**IDB**
343990

அதிகபட்ச நீளம்: 2.7 m




**முதன்மையான கண்டறிதலுக்குரிய அம்சங்கள்**

1. வெளித்தாடை இல்லை, மழுங்கிய உருண்டை தலை
2. சிறு உருண்டை முதுகுத் துடுப்பு
3. முதுகுப் பள்ளம் இல்லை
4. நிறம்: இளம் சாம்பல் நிறம், கீழ் பகுதியை விட மேல்பகுதியி-ல் அடர்நிறம்
5. பற்கள்: ஒவ்வொரு பல்வரிசையிலும் மேல்தாடையில் 11-22, கீழ்தாடையில் 14-19 பற்கள்



# Indo-Pacific Finless Porpoise
## (இந்து-பசுபிக் பின்லெஸ் போர்பொய்ஸ்)
*Neophocaena phocaenoides*

SP: marsopa lisa o sin aleta
FR: marsouin aptère
JA: スナメリ
CH: 印度太平洋无翅海豚

**PFI**
254985

போர்பொய்ஸ்கள் (Porpoises)

அதிகபட்ச நீளம்: 1.7 m




**முதன்மையான கண்டறிதலுக்குரிய அம்சங்கள்**

1. மழுங்கிய உருண்டை தலை
2. முதுகுத் துடுப்பு இல்லை
3. முதுகின் நடுவில் கட்டிகள் அல்லது புடைப்புகள் (turbercles)
4. நிறம்: இளம் சாம்பலிருந்து கருப்பு நிறம்
5. பற்கள்: ஒவ்வொரு வரிசையிலும் 15-22 மண்வெட்டி வடிவி-லான பற்கள்



# Killer Whale
## (கில்லர் வ்வேல்); ஓர்க்கா திமிங்கிலம்
## *Orcinus orca*

**SP:** orca
**FR:** orque
**JA:** シャチ
**CH:** 逆戟鯨

**KIW**
**137102**

அதிகபட்ச நீளம் ஆண்: 9.8 m




அதிகபட்ச நீளம் பெண்: 8.5 m




**முதன்மையான கண்டறிதலுக்குரிய அம்சங்கள்**

1. மிக உயரமான நேரான முதுகுத் துடுப்பு: ஆண்களில் 2 m வரையிலும் பெண்களில் 0.9 m வரையிலும்
2. மழுங்கிய வெளித்தாடை, சரியாக வரையறுக்கப்படாத அலகு
3. தனித்துவமான கருப்பு மற்றும் வெள்ளை வடிவம் (pattern)
4. பற்கள்: 10-14 பற்கள் /பல்வரிசை



# Short-finned Pilot Whale
## (சோர்ட்-பின்ட் பைலட் வ்வேல்)
*Globicephala macrorhynchus*

SP: calderón de aletas cortas
FR: globicéphale tropical
JA: コビレゴンドウ
CH: 短翅鯺鯨

**SHW**
137096

லார்ஜ் டோல்பின்கள் (Large Dolphins) / பிளாக்பிஷ் (Blackfish)

அதிகபட்ச நீளம்: ஆண்கள் 7.2 m: பெண்கள்: 5.5 m




**முதன்மையான கண்டறிதலுக்குரிய அம்சங்கள்**

1. குமிழ் வடிவ உருளை தலை
2. முதுகுத் துடுப்பு தலையிலிருந்து 1/3 தூரத்திதில் மட்டும்
3. முதுகுத் துடுப்பு மிக அகன்ற அடிப்பகுதி கொண்டுள்ளது
4. கருப்பு பழுப்பு, மார்பில் இளம் சாம்பல் நிற நங்கூர படை (patch)
5. பெரிய பருத்த உறுதியான விலங்கு
6. பற்கள்: ஒவ்வொரு பல்வரிசையிலும் 7-9 பற்கள்



# False Killer Whale
## (போல்ஸ் கில்லர் வ்வேல்)
## *Pseudorca crassidens*

SP: orca falsa
FR: faux-orque, pseudorque
JA: オキゴンドウ
CH: 假虎鲸

**FAW**
137104




அதிகபட்ச நீளம்: 2.6 m

**முதன்மையான கண்டறிதலுக்குரிய அம்சங்கள்**

1. நீண்ட ஒல்லியான உடல்
2. அலகு இல்லை, உருண்டை தலை
3. முதுகுத் துடுப்பு: குறுகிய அடிப்பகுதி, நடுத்தர உயரம், முனை பெரும்பாலும் உருண்டையானது
4. முன் ஓரத்தில் திமிலுடன் ஃபிளிப்பர்கள்
5. நிறம்: அடர் சாம்பல் அல்லது கருப்பு
6. பற்கள்: ஒவ்வொரு பல்வரிசையிலும் 7-12 பற்கள்



# Pygmy Killer Whale
## (பிக்மி கில்லர் வ்வேல்)
*Feresa attenuata*

SP: orca pigmea
FR: orque pygmée
JA: ユメゴンドウ
CH: 侏儒杀人鲸

**KPW**
137095

அதிகபட்ச நீளம்: 2.6 m




**முதன்மையான கண்டறிதலுக்குரிய அம்சங்கள்**

1. அலகு இல்லை, உருண்டை தலை
2. முதுகிலிருந்து ஒரு கோணத்தில் உயரும் உயரமான பெல்கேட் (falcate) வடிவிலான முதுகுத் துடுப்பு
3. நிறம்: அடர் சாம்பலிலிருந்து கருப்பு
4. முதுகு கேப், முதுகுத் துடுப்பின் கீழ் மட்டுமே சிறிது சரிகிறது
5. வெள்ளை உதடுகள்
6. பற்கள்: ஒவ்வொரு பல்வரிசையிலும் - மேல் தாடை 8-11, கீழ்தாடை 11-13



லார்ஜ் டோல்பின்கள் (Large Dolphins) / பிளாக்பிஷ் (Blackfish)

# Melon-headed Whale
## (மெலன்-ஹெடட் வ்வேல்)
## *Peponocephala electra*

SP: calderón pequeňon, delfin cabeza de melón
FR: péponocéphale, dauphin d'Electre
JA: カズハゴンドウ
CH: 瓜头鲸

**MEW**
137103

அதிகபட்ச நீளம்: 2.8 m




**முதன்மையான கண்டறிதலுக்குரிய அம்சங்கள்**

1. அலகு இல்லை, மேலே இருந்து பார்க்கும்போது தலை முக்கோண வடிவம்
2. முதுகின் நடுவில் உயரமான பெல்கேட் (falcate) வடிவிலான முதுகுத் துடுப்பு
3. உதடுகள் மற்றும் கீழ்தாடையின் முனை வெள்ளை நிறம்
4. நிறம்: கரி (charcoal) போன்ற சாம்பல், முதுகு கேப், முதுகுத் துடுப்பி-ன் கீழ் சரிகிறது
5. வெள்ளை சிறுநீர்-இலிங்க துவார படை மற்றும் நங்கூர வடிவ தொண்டை படை
6. பற்கள்: ஒவ்வொரு பல்வரிசையிலும் 20-25



# Risso’s Dolphin
## (ரிஸோஸ் டோல்பின்)
*Grampus griseus*

SP: delfin de Risso
FR: grampus, dauphin de Risso
JA: ハナゴンドウ
CH: 里索的海豚

**DRR**

137098

லார்ஜ் டோல்பின்கள் (Large Dolphins) / பிளாக்பிஷ் (Blackfish)

அதிகபட்ச நீளம்: 3.8 m




**முதன்மையான கண்டறிதலுக்குரிய அம்சங்கள்**

1. மழுங்கலான தலை, அலகு இல்லை
2. நெற்றியின் முன்பகுதியில் நிலைக்குத்து மடிப்பு
3. மிக உயரமான, பெல்கேட் (falcate) வடிவிலான முதுகுத் துடுப்பு
4. வாயோரம் மேல்நோக்கி சரிந்துள்ளது
5. நிறம்: வடுக்களின் காரணமாக அடர் சாம்பலிலிருந்து வெள்ளை
6. பற்கள்: கீழ் தாடையின் ஒவ்வொரு பக்கத்திலும் 2-7



# Cuvier's Beaked Whale
## (குவியர்ஸ் பீக்ட் வ்வேல்)
*Ziphius cavirostris*

SP: zifio de Cuvier, ballena picuda de Cuvier
FR: ziphius, baleine à bec de Cuvier
JA: アカボウクジラ
CH: 库维尔的喙鲸

**BCW**
137127




அதிகபட்ச நீளம்: 9.8 m

**முதன்மையான கண்டறிதலுக்குரிய அம்சங்கள்**

1. குறுகிய சரியாக வரையறுக்கப்படாத அலகு
2. வாயோரம்படிப்படியாக மேல்நோக்கி வளைந்துள்ளது
3. சீராகச் சரியும் நெற்றி மற்றும் தலையின் பின்புறம் குழிவான பகுதி
4. சோடியான, V-வடிவிலான தொண்டைப் பள்ளங்கள்
5. சிறிய, பெல்கேட் (falcate) வடிவிலான முதுகுத் துடுப்பு வெளித்தா-டையிலிருந்து 2/3 தூரத்தில்
6. நிறம்: துரு நிற (rusty) பழுப்பு/சாம்பல், தலையைச் சுற்றி இள நிறம்
7. கண்களைச் சுற்றி அடர்நிற பகுதிகள், உடலில் நேர்கோடு மற்றும் வட்ட வடிவ வடுக்கள்
8. பற்கள்: ஆண்களில் மட்டும் - கீழ்தாடையின் முனையில் ஒரு சோடி கூம்பு பற்கள்



# Southern Bottlenose Whale
## (சதர்ன் பாட்டில்நோஸ் வ்வேல்)
*Hyperoodon planifrons*

**SP: ballena nariz de botella del sur**
**FR: hyperoodon austral**
**JA: ミナミトックリクジラ**
**CH: 南部宽吻鲸**

**SRW**

343900



அதிகபட்ச நீளம்: 7.8 m




### முதன்மையான கண்டறிதலுக்குரிய அம்சங்கள்

1. நிலைக்குத்து நெற்றி மற்றும் குமிழ்வடிவ மெலன்
2. தனித்துவமான அலகு
3. சோடியான, V-வடிவிலான தொண்டைப் பள்ளங்கள்
4. சிறிய, மிகத்தெளிவான பெல்கேட் (falcate) வடிவிலான முதுகுத் துடுப்பு வெளித்தாடைலிருந்தான உடலின் 2/3 பகுதியில் அமை-ந்துள்ளது
5. வெளிர் சாம்பல் /பழுப்பு, தலை மற்றும் அடிப்பகுதியில் வெளி-ர்நிறம்
6. பற்கள்: ஆண்களில் மட்டும் - கீழ்தாடையின் முனையில் ஒரு சோடி பற்கள்



# Longman’s Beaked Whale
## (லோங்மேன்ஸ் பீக்ட் வ்வேல்)
*Indopacetus pacificus*

SP: zifio de Longman
FR: baleine à bec de Longman
JA: ロングマンオウギハクジラ
CH: 朗曼的喙鯨

**BNW**
231418




அதிகபட்ச நீளம்: 9 m

**முதன்மையான கண்டறிதலுக்குரிய அம்சங்கள்**

1. தனித்துவமான அலகு மற்றும் ஓரளவு சரிவான நெற்றி
2. மற்ற பீக்ட் திமிங்கிலங்களை விட பெரிய முதுகுத் துடுப்பு
3. தொண்டையில் V-வடிவப் பள்ளங்கள்
4. நிறம்: பழுப்பிலிருந்து நீல சாம்பல்
5. வெளிர் நிற தலை மற்றும் ஃபிளிப்பர்களிலிருந்து கண்கள் வரை மற்றும் மூக்குத்துவாரம் வரை அடர் பட்டி
6. பற்கள்: கீழ்தாடையின் முனையில் ஒற்றைச் சோடி நீள் உருளை பற்கள்



# Gray's Beaked Whale
## (கிரெய்ஸ் பீக்ட் வ்வேல்)
*Mesoplodon grayi*

SP: zifio de Gray
FR: baleine à bec de Gray
JA: ミナミオウギハクジラ
CH: 灰色的喙鲸

**BYW**
134124



அதிகபட்ச நீளம்: 5.5 m




**முதன்மையான கண்டறிதலுக்குரிய அம்சங்கள்**

1. மிக நீண்ட குறுகிய வெள்ளை மூக்கு, நேரான வாயோரம்
2. ஆழமற்ற சரியும் நெற்றி
3. சோடியான, V-வடிவிலான தொண்டைப் பள்ளங்கள்
4. நிறம்: வடுக்கள் மற்றும் சிராய்ப்புகளுடன் பெரும்பாலும் சாம்பல்
5. பற்கள்: மேல்தாடையின் பின்பகுதியில் 17-22 சிறு பற்களின் சோடிகள்
6. ஆண்களில் மட்டும்: கீழ்தாடையின் நடுவில் இரண்டு முக்கோண பற்கள்



பீக்ட் திமிங்கிலங்கள் (Beaked Whales)

# Blainville's Beaked Whale
## (ப்லைன்வில் பீக்ட் வ்வேல்)
## *Mesoplodon densirostris*

SP: zifio de Blainville, ballena picuda de Blainville
FR: baleine à bec de Blainville
JA: コブハクジラ
CH: 布兰维尔的喙鲸

**BBW**
137122

அதிகபட்ச நீளம்: 4.7 m




**முதன்மையான கண்டறிதலுக்குரிய அம்சங்கள்**

1. கீழ்தாடை மிகவும் நன்றாக வளைந்துள்ளது
2. சோடியான, V-வடிவிலான தொண்டைப் பள்ளங்கள்
3. நிறம்: பழுப்பான சாம்பல், ஆண்களில் வடுக்கள் மிக அதிகம்
4. ஆண்களில் மட்டும் - தாடை வளைவுகள் தட்டையான-வை, கோரைப்பறக்கள் (tusks) வெளித்தள்ளப்பட்டுள்ளன
5. ஸ்டாக்ட் பார்னகல்களினால் (stalked barnacles), கோரை-ப்பறக்கள் பெரும்பாலும் சூழப்பட்டிருக்கும்



# Sperm Whale
## (ஸ்பெர்ம் வ்வேல்)
*Physeter macrocephalus*

SP: cachalote
FR: cachalot
JA: マッコウクジラ
CH: 抹香鯨

**SPW**
137119

ஸ்பெர்ம் திமிங்கிலங்கள் (Sperm Whales)




அதிகபட்ச நீளம்
ஆண்கள்: 19.2 m
பெண்கள்: 12.5 m

**முதன்மையான கண்டறிதலுக்குரிய அம்சங்கள்**

1. மிக பெரிய சதுர தலை
2. மூக்குத்துவாரம் இடப்புறமாக உள்ளது
3. குறுகிய, கீழ்நோக்கி தொங்கும் கீழ்தாடை
4. சிறு, உருண்டையான முதுகுத் திமில்
5. வால் ஸ்டாக்கில் தொடர்களாக மேற்புடைப்புகள் (bumps)
6. நிறம்: மிகப்பிரதானமாக கருப்பு
7. பற்கள்: ஒவ்வொரு கீழ்தாடையிலும் 18-26 பற்கள்



# Pygmy Sperm Whale
## (பிக்மி ஸ்பெர்ம் வ்வேல்)
*Kogia breviceps*

SP: cachalote pigmeo
FR: cachalot pygmée
JA: コマッコウ
CH: 侏儒抹香鲸

**PYW**
137113

அதிகபட்ச நீளம்: 3.8 m




**முதன்மையான கண்டறிதலுக்குரிய அம்சங்கள்**

1. சிறிய கீழ்தொங்கும் கீழ்தாடை
2. பெரிய மழுங்கிய தலை மற்றும் உறுதியான உடல்
3. சிறு ஃபிளிப்பர்கள் தலைக்கு மிக அருகாமையில்
4. அரிவாளை (பெல்கேட்/falcate) மிகவும் ஒத்த வடிவிலான முதுகுத் துடுப்பு
5. முதுகுத் துடுப்பு, முதுகின் நடுவிலிருந்து மிகவும் பின்புறமாக உள்ளது
6. கண்களின் பின்புறம் இளம் நிற வளைவான அடையாளம் (mark)
7. பற்கள்: ஒவ்வொரு கீழ்தாடையிலும் 12-16 நீண்ட கூர்மையான பற்கள்



# Dwarf Sperm Whale
## (டவாவ்ப் ஸ்பெர்ம் வ்வேல்)
*Kogia sima*

SP: cachalote enano
FR: cachalot nain
JA: オガワコマッコウ
CH: 矮小的抹香鯨

**DWW**
159025

ஸ்பெர்ம் திமிங்கிலங்கள் (Sperm Whales)

அதிகபட்ச நீளம்: 2.7 m




**முதன்மையான கண்டறிதலுக்குரிய அம்சங்கள்**

1. சிறிய கீழ்தொங்கும் கீழ்தாடை
2. பெரிய மழுங்கிய தலை மற்றும் உறுதியான உடல்
3. தலைக்கு அருகில் சிறு மழுங்கலான ஃபிளிப்பர்கள்
4. முதுகின் நடுப்பகுதிக்கு சிறிது பின்னால் முதுகுத் துடுப்பு
5. கண்களின் பின்புறம் இளம் நிற வளைவான அடையாளம்
6. பற்கள்: ஒவ்வொரு கீழ்தாடையிலும் 7-12 பற்கள்



பலீன் திமிங்கிலங்கள் (Baleen whales)

# Southern Right Whale
## (சதர்ன் ரய்ட் வ்வேல்)
*Eubalaena australis*

SP: ballena franca austral
FR: baleine australe, baleine franch australe
JA: ミナミセミクジラ
CH: 南方的右鯨

**EUA**
**220222**




அதிகபட்ச நீளம்: 17 m

**முதன்மையான கண்டறிதலுக்குரிய அம்சங்கள்**

1. வில் வடிவில் வளைந்த வாயோரம்
2. முதுகுத் துடுப்பு இல்லை மற்றும் துடுப்பு/விசிறி வடிவிலான பிளிப்பர்கள்
3. உடலின் முழு நீளத்தில் 1/3 பாகம் வரை தலை
4. வாலின் மடல்கள் (tail flukes) மிகவும் அகலமானவை, சீரான பின்புற விளிம்பு கொண்டவை
5. தலையில் கரடான தோல் (callosities)
6. நிறம்: வெள்ளை வயிற்று படைகளுடன் கூடிய கருப்பு நிறம்
7. பலீன் (Baleen): 200-270 நீண்ட, குறுகிய பலீன் தட்டுக்கள் /பக்கமொ-ன்று 3 m வரை நீளம் வரையில்; மென் சாம்பலிலிருந்து கருப்பு நிறமான வெளிநீட்சிகளுடன் (fringes) அடர் சாம்பலிலிருந்து கருப்பு



# Pygmy Right Whale
## (பிக்மி ரய்ட் வ்வேல்)
*Caperea marginata*

SP: ballena franca pigmea
FR: baleine pygmée
JA: コセミクジラ
CH: 倭格米右鲸

**CPM**
231424

பலீன் திமிங்கிலங்கள் (Baleen whales)

அதிகபட்ச நீளம்: 6.5 m




**முதன்மையான கண்டறிதலுக்குரிய அம்சங்கள்**

1. வில் வடிவில் வளைந்த வாய்
2. பெல்கேட் (falcate) வடிவிலான முதுகுத் துடுப்பு வெளித்தாடையிலிருந்து ~75% தூரத்தில்
3. உடல் நீளத்தின் 1/3 மடங்கு சிறிய தலை
4. தலையில் ஒற்றை நடு-முதுகுப்புற முகடு (mid-dorsal ridge)
5. நிறம்: மேலே அடர் சாம்பல், கீழே வெளிர் சாம்பல்
6. பலீன் (Baleen): 213-230 பலீன் தட்டுகள்/பக்கமொன்று 68 cm நீளம் மிக நுண்ணிய வெளிநீட்சிகளுடன் (fringes) மஞ்சள் கலந்து வெள்ளை



# Blue Whale
## (ப்ளூ வ்வேல்); நீலத்திமிங்கிலம்
*Balaenoptera musculus*

SP: ballena azul
FR: rorqual bleu, baleine bleu
JA: シロナガスクジラ
CH: 蓝鲸

**BLW**
137090

அதிகபட்ச நீளம்: 33 m
பிக்மி வடிவம்: 25 m




**முதன்மையான கண்டறிதலுக்குரிய அம்சங்கள்**

1. U-வடிவிலான தலை (மேலிருந்து பார்க்கும்போது)
2. தலையின் நடுவின் வழியே ஒற்றை முகடு மற்றும் மூக்குத்துவாரத்தைச் சுற்றி பெரிய ஸ்பிளாஷ்-கார்டு (splash-guard)
3. முதுகுத் துடுப்பு மிகவும் சிறியது வெளித்தாடையிலிருந்து 3/4 தூரத்தில் உள்ளது
4. நிறம்: புள்ளிகளுடன் நீலம் மற்றும் இளம் சாம்பல்
5. கொப்பபூழ் வரை நீளும் 60-88 நீண்ட தொண்டை மடிப்புகள்
6. பலீன் (Baleen): 260-400 சோடி கருப்பு தட்டுகள் ஒவ்வொன்றும் <1 m நீளம் கொண்டவை, கரடான மயிர்களுடையது



# Fin Whale
# (பின் வ்வேல்)
*Balaenoptera physalus*

SP: rorcual común, ballena de aleta
FR: rorqual commun
JA: ナガスクジラ
CH: 鲸鱼

**FIW**
137091






அதிகபட்ச நீளம்:
27 m

**முதன்மையான கண்டறிதலுக்குரிய அம்சங்கள்**

1. V-வடிவிலான தலை (மேலிருந்து பார்க்கும்போது)
2. தலையின் நடுவின் வழியே ஒற்றை முகடு
3. நீலத்திமிங்கிலத்தைவிட முதுகுத் துடுப்பு உயரமானது மற்றும் அதிகமாக பெல்கேட் (falcate) வடிவானது
4. நிறம்: கருப்பு/அடர் பழுப்பு அடிப்பகுதியில் வெளிராக மங்கல-டைகிறது
5. இடது கீழ்தாடை கருப்பு நிறம், வலது கீழ்தாடை வெள்ளை நிறம்
6. உடலில் நிறைய வெள்ளை சுழல்கள்/ V-வடிவ பட்டிகள் (chevrons)
7. கொப்பூழ் வரை 50-100 நீண்ட தொண்டை மடிப்புகள்
8. பலீன் (Baleen): 260-480 தட்டுகள்/பக்கம், மஞ்சள்/வெள்ளை அல்லது ஆலிவ் பச்சை வரிகளுடன் அடர் சாம்ப-லிலிருந்து கருப்பு வெளிநீட்சிகளுடன்



பலீன் திமிங்கிலங்கள் (Baleen whales)

# Sei Whale
## (சேய் வ்வேல்)
*Balaenoptera borealis*

SP: rorcual sei, ballena sei
FR: rorqual de Rudolphi
JA: イワシクジラ
CH: 塞鯨

**SIW**
137088

அதிகபட்ச நீளம்: 18 m




**முதன்மையான கண்டறிதலுக்குரிய அம்சங்கள்**

1. முதுகுத் துடுப்பு முதுகிலிருந்து செங்குத்து கோணத்தில் உயர்கிறது
2. நன்கு கூர்மையான வெளித்தாடை
3. தலையின் நடுவின் வழியே ஒற்றை முகடு
4. நிறம் அடர் சாம்பல் அல்லது பழுப்பு
5. பெரும்பாலும் உடலில் அதிக வடுக்கள்
6. கொப்பூழுக்கு முன்பாகவே முடியும் 32-65 சிறு தொண்டை மடிப்புகள்
7. பலீன் (Baleen): 219-402 கருப்பு பலீன் தட்டுகள்/பக்கம் மிக நுண்ணிய சாம்பல்/வெள்ளை வெளிநீட்சிகளுடன்



# Bryde's Whale
## (பிரய்ட்ஸ் வ்வேல்)
*Balaenoptera edeni/brydei complex*

SP: rorcual tropical, ballena de Bryde
FR: rorqual de Bryde
JA: カツオクジラ
CH: 布赖德的鲸鱼

**BRW**
137089

அதிகபட்ச நீளம்:
16 m






**முதன்மையான கண்டறிதலுக்குரிய அம்சங்கள்**

1. தலையின் கீழ்நடுப்பகுதியில் மூன்று தெளிவான முகடுகள்
2. உயரமான பெல்கேட் (falcate) வடிவிலான முதுகுத் துடுப்பு
3. சில வடுக்களுடன் மேலே அடர் சாம்பல், கீழே வெளிர் நிறம்
4. தாடைகள் மற்றும் உதடுகள் அடர் நிறம்
5. கொப்பூழ் வரை நீளும், அல்லது தாண்டிப் போகும் 40-70 தொண்டை மடிப்புகள்
6. Baleen: கரடான இளம் சாம்பல் வெளிநீட்சிகளுடன் கூடிய 250-370 சோடி சாம்பல்
7. பலீன் (Baleen) தட்டுகள்



பலீன் திமிங்கிலங்கள் (Baleen whales)

# Omura's Whale
## (ஓமுராஸ் வ்வேல்)
*Balaenoptera omurai*

SP: ballena de Omura
FR: rorqual d'Omura
JA: ツノシマクジラ
CH: 大村的鲸鱼

**BXO**
343896

அதிகபட்ச நீளம்: 12 m




**முதன்மையான கண்டறிதலுக்குரிய அம்சங்கள்**

1. தலையின் நடுவில் ஒற்றை முகடு
2. முதுகிலிருந்து செங்குத்தாக உயரும், உயரமான மிகவும் பெல்கேட் (falcate) வடிவிலான முதுகுத் துடுப்பு
3. உடலின் மேல்பகுதி அடர் சாம்பல், கீழ்பகுதி இளம் சாம்பல்
4. வலது கீழ்தாடை வெள்ளை நிறம், இடது கீழ்தாடை அடர் நிறம்
5. முதுகில் இளம் நிற கோடுகள்
6. கொப்பூழ் வரை நீளும் 80-90 தொண்டை மடிப்புகள்
7. பலீன் (Baleen): 180-210 சோடிகள் குட்டையான/அகன்ற பலீன் தட்டுகள், முன்புறம் கிரீம் நிறம் மற்றும் பின்புறம் கருப்பு நிறம்



# Common Minke Whale
## (கொமன் மின்கே வ்வேல்)
*Balaenoptera acutorostrata*

SP: rorcual enano, ballena minke
FR: petit rorqual
JA: コイワシクジラ
CH: 普通小须鲸

**MIW**
**137087**

பலீன் திமிங்கிலங்கள் (Baleen whales)




அதிகபட்ச நீளம்: 9 m

**முதன்மையான கண்டறிதலுக்குரிய அம்சங்கள்**

1. சிறிய, பளபளப்பான (sleek) திமிங்கிலம்
2. கூர்மையான தலை, நடுவில் தெளிவான முகடு
3. மேலே சாம்பல் நிறம், கீழே வெளிர் நிறம், பக்கங்களில் தனித்துவமான வெளிர் பகுதிகள்
4. ஒவ்வொரு பிளிப்பரிலும் பளிச்சென்ற வெள்ளைப் படை
5. பிளிப்பர்களைச் சிறிதளவு தாண்டிச் செல்லும் 50-70 சிறு தொண்டை மடிப்புகள்
6. பலீன் (Baleen): கிரீம் நிற 231-285 சோடி தட்டுகள்



# Antarctic Minke Whale
## (அண்டார்டிகா மின்கே வ்வேல்)
*Balaenoptera bonaerensis*

SP: rorcual enano, ballena minke
FR: petit rorqual Antarctique
JA: クロミンククジラ
CH: 南极小须鲸

**BFW**
231405

அதிகபட்ச நீளம்: 10 m




**முதன்மையான கண்டறிதலுக்குரிய அம்சங்கள்**

1. சிறிய, பளபளப்பான திமிங்கிலம்
2. கூர்மையான தலை, நடுவில் தெளிவான முகடு
3. மேலே சாம்பல் நிறம், கீழே வெளிர் நிறம், பக்கங்களில் தனித்துவமான வெளிர் பகுதிகள்
4. ஒரே சீரான சாம்பல் நிற பிளிப்பர்கள்
5. பிளிப்பர்களைச் சிறிதளவு தாண்டிச் செல்லும் 22-38 சிறு தொண்டை மடிப்புகள்
6. பலீன் (Baleen): 200-300 சோடி கருப்பு அல்லது வெள்ளை பலீன் (baleen) தட்டுகள்



# Humpback Whale
## (ஹம்ப்பெக் வ்வேல்)
## *Megaptera novaeangliae*

SP: rorcual jorobado, ballena jorobado
FR: baleine à bosse, mégaptère, jubarte
JA: ザトウクジラ
CH: 座头鲸

**HUW**
137092

பலீன் திமிங்கிலங்கள் (Baleen whales)

அதிகபட்ச நீளம்: 17 m




## முதன்மையான கண்டறிதலுக்குரிய அம்சங்கள்

1. உடலின் முழு நீளத்தின் 1/3 பாகம் வரையுள்ள மிக நீண்ட ஃபிளிப்பர்கள்
2. ஃபிளிப்பரின் ஓரங்களில் தொடரான வெளிப் புடைப்புகள் (bumps)
3. வாலின் மடல்களின் பின்புற விளிம்பு நுண்ணிய வெட்டுகள் (serrated) கொண்டது
4. குறுகிய அகன்ற முதுகுத் திமில்
5. தலையில் புடைப்புகள் (turbercles)
6. கருப்பு மற்றும் வெள்ளை நிறம்
7. 14-35 நீளமான தொண்டைமடிப்புகள், கொப்பூழ்வரை நீள்கின்றன
8. பலீன் (Baleen): 270-400 சோடி கருப்பு/ஆலிவ் நிற பலீன் தட்டுகள்

அழியும் ஆபத்தை அன்மித்துள்ள இடம்பெயராத Arabian Sea humpback whale (அராபிக் கடல் ஹம்ப்பெக் வ்வேல்) குடித்தொகையின் இருப்பிடம்



# காணக்கூடிய பிற இனங்கள்

| விலங்கினங்கள் | பரவல் | முதன்மையான கண்டறிதலுக்குரிய அம்சங்கள் | விலங்கினங்கள் | பரவல் | முதன்மையான கண்டறிதலுக்குரிய அம்சங்கள் |
|---|---|---|---|---|---|
| Hourglass dolphin (ஹௌர்கிளாஸ் டோல்பின்) (*Lagenorhynchus cruciger*) - **HRD 383563** | குளிர் மிதவெப்ப & துருவம் | அதிகபட்ச நீளம்: 1.9 m கருப்பு பின்புறம், வெள்ளை நிற வயிறு, பக்கங்களில் வெள்ளை மணிச்சாடி வடிவம். மழுகலான அலகு, பெரிய முதுகுத் துடுப்பு. பற்கள் : ஒரு பல்வரிசைக்கு 26-35 | Strap-toothed beaked whale **(ஸ்ட்ராப்-டூத்ட் பீக்ட் வ்வேல்)** (*Mesoplodon layardii*) - **TSW 231429** | ஆழ்கடல், கரைக்கு அப்பால், மிதவெப்ப & துணை அண்டார்டிகா | அதிகபட்ச நீளம்: 6.2 m வெள்ளைப் படைகளுடன் கூடிய கருப்பு/சாம்பல் நிறம் அத்துடன் வெள்ளை அலகு, கீழ்தாடை, மார்பு (thoracic) பகுதி, & கண்களுக்கு பின். ஆண்: அலகுக்கு மேல் 2 நீண்ட கோரைப்பற்கள் வளைகின்றன |
| Southern right whale dolphin (சதர்ன் ரயட் வ்வேல் டோல்பின்) (*Lissodelphis peronii*) - **RSW 231414** | குளிர் மிதவெப்ப & துணை அண்டார்டிகா | அதிகபட்ச நீளம்: 3 m நீண்ட, மெலிவான டோல்பின், முதுகுத் துடுப்பு இல்லை, சிறிய அலகு, கருப்பு முதுகுப்புறம் மற்றும் வெள்ளை வயிறு. பற்கள்: ஒரு பல்வரிசைக்கு 44-49 | Andrews' beaked whale (அன்றவ்ஸ் பீக்ட் வ்வேல்) (*Mesoplodon bowdoini*) - **BDW 231430** | ஆழ்கடல், கரைக்கு அப்பால், மிதவெப்ப & துணை அண்டார்டிகா | அதிகபட்ச நீளம் 4.4 m வெள்ளை அலகின் நுனி மற்றும் உடலில் வெள்ளை வடுக்கள் கொண்ட அடர் சாம்பல் நிறம், வில் வடிவில் வளைந்த வாயோரம், சிறிய அலகு, ஆழமற்ற சரியும் மெலன். ஆண்: தாடையின் நடுவில் தோன்றி பின்பக்கம் சரிந்துள்ள இரு தட்டையான கோரைப்பற்கள் |
| Arnoux's beaked whale (அர்னுஸ் பீக்ட் வ்வேல்) (*Berardius arnuxii*) - **BAW 242606** | ஆழந்த, குளிர், மிதவெப்ப & துணை துருவம் | அதிகபட்ச நீளம்: 9.3 m குழாய் போன்ற அலகு, சரியும் குமிழ் வடிவ நெற்றி, பின்பக்க இணைப்பு கொண்ட மூக்குதுவாரம், ஸ்லேட் சாம்பல்/வெளிர் பழுப்பு, உருண்டை நுனி உடைய முதுகுத் துடுப்பு. 4 முக்கோண பற்கள் | Deraniyagala's beaked whale (தேரணியகலஸ் பீக்ட் வ்வேல்) (*Mesoplodon hotaula*) - **384422** | வெப்பமண்டல இந்து- பசுபிக் | அதிகபட்ச நீளம் 4.8 m நடுத்தர நீள அலகு மற்றும் ஆண்களில் சிறிது வளைந்த வாயோரம். அலகின் கீழ்பகுதி வெள்ளை நிறத்துடன் அடர் சாம்பல். ஆண்: தாடையின் வளைவின் மேல் தோன்றும் 2 தட்டையான கோரைப்பற்கள் |
| Hector's beaked whale (ஹெக்டர்ஸ் பீக்ட் வ்வேல்) (*Mesoplodon hectori*) - **BHW 137125** | குளிர் மிதவெப்ப | அதிகபட்ச நீளம்: 4.3 m நன்றாக நீண்ட அலகு, சரியும் நெற்றி, நேரான வாயோரம், மேலே அடர் சாம்பல், கீழே வெளிர் நிறம். ஆண் - வெள்ளை அலகு மற்றும் நெற்றி. தாடை முனையில் 2 முக்கோண கோரைப்பற்கள் | True's beaked whale (த்ருஸ் பீக்ட் வ்வேல்) (*Mesoplodon mirus*) - **BTW 137126** | தெற்கு இந்து சமுத்திரம் | அதிகபட்ச நீளம்: 5.4 m சாம்பல் நிற உடல் ஆனால் வெள்ளை/இளம் சாம்பல் முதுகுத் துடுப்பு, வால் ஸ்டாக், வாலின் மடல்களின் கீழ்பகுதி மற்றும் கீழ் தாடை. கீழ் தாடையின் நுனியிலிருந்து 2 நீள்உருளைக் கோரைப்பற்கள் முன்னோக்கிய கோணத்தில் தோன்றுகின்றன |

Indian Ocean Tuna Commission (IOTC) இனால் இவ் அடையாள அட்டைகள் தயாரிக்கப்படுவதற்கான காரணம், இந்து சமுதத்திரத்தின் டூனா (tuna) மீன்பிடி நடவடிக்கைகளுடன் இடைத்தொடர்பிலுள்ள மீன் வடிவ நீர்வாழ் முலையூட்டிகள் (cetaceans) தொடர்பான தகவல்கள் மற்றும் புள்ளிவிபரங்களை மேம்படுத்துவதற்கு உதவுவதற்காகும். சிடேசன்கள் குறிப்பாகச் சுரண்டல்களுக்கு உட்படுத்தப்படக்கூடியவை, மேலும் மீன்பிடி செயற்பாடுகளில் cetaceanகளின் இறப்பு வீதம் பற்றிய மேம்படுத்தப்பட்ட ஆவணப்படுத்தல்கள், இந்து சமுத்திர மீன்பிடி நடவடிக்கைகள் நீடித்து நிலைபெறும் முறையில் நிர்வாகம் செய்யப்படுவதை உறுதிப்படுத்த உள்ளூர் மீன்பிடி மேலாளர்களுக்கு உதவும். இந்த வழிகாட்டிகள் மீன்பிடி கண்காணிப்பாளர்கள், மாதிரி சேகரிப்பவர்கள், டூனா, டூனா போன்ற இனங்கள் மற்றும் சுறாக்களை இந்து சமுத்திரத்தில் பிடிக்கும் மீனவப்படகுகளின் தலைவர்கள் மற்றும் பயனிக்கும் சக மீனவ குழு  ஆகியோரினால் பயன்படுத்தப்படுவதற்காக வடிவமைக்கப்பட்டது.

இந்தப் பதிப்பு, அமெரிக்க கடல்வாழ் பாலூட்டிகள் ஆணையத்தால் வழங்கப்பட்ட நிதி உதவியால் சாத்தியமானது

இந்தப் பதிப்பு, டாக்டர் கில் பராலிக் (Dr Gill Braulik) லேஅவுட்டால் தயாரிக்கப்பட்டது
இந்த அட்டைகளின் உருவாக்கத்தில் பயன்படுத்தப்பட்ட முதன்மை தகவல் மூலங்கள்:
Berggren P (2009) Whales and dolphins: கிழக்கு ஆப்பிரிக்காவின் கடல் பாலுட்டிகளின் கள வழிகாட்டி, மற்றும் Jefferson TA, Webber MA, Pitman RL (2015) உலகின் கடல் பாலுட்டிகள்: அவற்றை அடையாளம் காணுவதற்கான விரிவான வழிகாட்டி
படங்கள் © Uko Gorter.  டைவ் சுயவிவரங்கள் © Phil Coles

மேலும் தகவல்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்: Indian Ocean Tuna Commission Le Chantier Mall
PO Box 1011, Victoria, Seychelles தொலைபேசி: +248 422 54 94 தொலைநகல்: +248 422 43 64
மின்னஞ்சல்: secretariat@iotc.org இணையதளம்:   http://www.iotc.org

© FAO, 2021
CA1893TA/1/10.21